**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 107/2018**

**Deposition of P.W. 2 – செந்தில்**

**Dated:** 18.02.2026

**Accused Present.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஸ்டாலினை சம்பவத்திற்கு முன்னர் தெரியாது, சம்பவத்தின் போது தான் தெரியும். அடிப்பட்டதை நான் பார்த்தேன். ஸ்டாலினுக்கு ரத்தக்காயம் இருந்தது. இடதுகை மணிக்கட்டின் அருகே ரத்தக்காயம் காணப்பட்டது. காயம் எவ்வளவு பெரியது என்று நான் பார்க்கவில்லை. அந்த காயத்திலிருந்து ரத்தம் வந்து கொண்டிருந்தது. தரையிலும் ரத்தம் பட்டது. ஸ்டாலின் துணியிலும் ரத்தம் பட்டது. ஸ்டாலினை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. காயம்பட்டவருக்கு நான் முதலுதவியும் செய்யவில்லை. எதிரிக்கு எதிராக நான் வேறு வழக்குகளில் சாட்சி சொன்னதில்லை. நான் பூக்கடையிலிருந்து - பூக்கடைக்கு போனேன். நான் போகும் போது சம்பவ இடத்தில் சம்பவம் நடந்தது. வெட்டருவாள் பார்த்துள்ளேன். வெட்டரிவாளுக்கும், வெட்டுக்கத்திக்கும் வித்தியாசம் உண்டு. சம்பவ இடத்திற்கு எதிரி வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஸ்டாலின் கொடுத்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.